(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 10 (6).]

# பாராளுமன்றம்

## 10 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2014 மாச்சு 21 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2014 ஏப்பிறல் 08, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— சுங்கக் கட்டளைச்சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 2014.03.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதித் தீர்வைகள் தொடர்பிலான தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2014 சனவரி 20 ஆம் திகதிய 1846/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2014 சனவரி 20 ஆம் திகதிய 1846/7 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.03.18ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிகள்,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் மதுவரி தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2014 சனவரி 20ஆம் திகதிய 1846/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.03.18ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(962 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல்)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ், மதுவரி தொடர்பில், நிதி திட்டமிடல் அமைச்சரினால் விதிக்கப்பட்டு 2014 சனவரி 20 ஆம் திகதிய 1846/9 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.03.18ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(963 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல்)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தேசிய பொது வழிகள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடனும், 2008 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, தேசிய பொது வழிகள் சட்டத்தின் 13 ஆம் மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 89 ஆம் பிரிவின் (2) ஆம் பந்தியின் (இ) எனும் உட்பந்தியின் கீழ் பாவனையாளர் கட்டண தேசிய பெருந்தெருவினைப் பயன்படுத்துகின்ற ஒவ்வொரு வாகனத்தினதும் சாரதியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கட்டணங்கள் தொடர்பில் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2013 ஒற்றோபர் 17 ஆம் திகதிய 1832/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.03.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*

உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*

நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*

பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*

தொலைத்தொடர்பு அறவீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*

விசேட வியாபாரப் பண்ட அறவீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*

கம்பெனிகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*

தவணை தவறிய வரிகள் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் —இரண்டாம் மதிப்பீடு

*

பணச் சட்டம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

# 2014 ஏப்பிறல் 22, செவ்வாய்க்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2439/ '12

கௌரவ புத்திக பதிரண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) மாத்தறை மாவட்டத்தில் நில்வளா பள்ளத்தாக்கின் இருமருங்கிலும் அமைந்துள்ள இன்னாக் காட்டுப் பிரதேசத்தில் பெருந்தொகையான வயல்கள் பாழடைந்துள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி காணிகளை நெற்பயிர்ச்செய்கைக்காகவோ வேறு பயிரினங்களைப் பயிரிடவோ பொருத்தமான வகையில் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திட்டம் யாது என்பதையும்;

(iii) தற்போது மேற்படி நிலத்தைச் சாகுபடி செய்தல் தொடர்பான நடவடிக்கைகளுக்காக நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், ஒதுக்கப்பட்டுள்ள மொத்தப் பணத்தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2469/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) "தெயட்டகிருல" கண்காட்சி தொடர்பாக,

(i) இற்றைவரை நடாத்தப்பட்ட கண்காட்சிகளின் எண்ணிக்கையையும்;

(ii) அக்கண்காட்சிகள் ஒவ்வொன்றும் நடத்தப்பட்ட இடங்களையும்;

(iii) ஒவ்வொரு கண்காட்சிக்குமான செலவினத்தை வெவ்வேறாகவும்;

(iv) எதிர்காலத்தில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள கண்காட்சிகளையும்

அவர் கூறுவாரா?

(ஆ) அனுராதபுர மாவட்டத்தில் நடத்தப்பட்ட "தெயட்டகிருல" கண்காட்சியுடன் தொடர்புபட்டதாக,

(i) அது நடத்தப்பட்ட திகதியையும்;

(ii) கண்காட்சித் திடலுக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட காணியின் அமைவிடம் மற்றும் அதன் அளவையும்;

(iii) மொத்தச் செலவு மற்றும் ஒவ்வொரு அமைச்சுக்கான செலவையும்;

(iv) மூலதனப் பொருட்களுக்காகச் செலவிட்ட தொகையை மொத்தச் செலவினத்தின் சதவீதமாகவும்;

(v) எஞ்சியுள்ள மூலதனப் பொருட்கள் அல்லது கட்டிடங்களையும்;

(vi) மேற்குறிப்பிட்ட மூலதனப் பொருட்களுக்காகச் செலவிடப்பட்ட தொகை எவ்வாறு நியாயப்படுத்தப்படுகின்றது என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2504/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) வட மாகாணத்தில் சம்பத்நுவர பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஜனகபுர வித்தியாலயத்தின் பௌதீக வளங்கள் மற்றும் மனித வளங்களில் பற்றாக்குறைகள் நிலவுகின்றன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஜனகபுர வித்தியாலயத்தில் நிலவுகின்ற பௌதீக வளங்கள் மற்றும் மனித வளங்களின் பற்றாக்குறைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி குறைபாடுகளை நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில் அதற்காக கழியும் காலம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3264/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கெட்பதற்கு,— (3)

(அ) (i) கொரிய மொழித் தேர்ச்சிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக 2012 ஓகத்து மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் அனுமதிப் பத்திரங்கள் விநியோகிக்கப்பட்ட நிலையங்களின் எண்ணிக்கை;

(ii) மேற்படி நிலையங்களால் விநியோகிக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை

எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2011 ஆம் ஆண்டில் கொரிய மொழித் தேர்ச்சிப் பரீட்சைக்காக விநியோகிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை, அதற்குத் தோற்றியவர்களின் எண்ணிக்கை, சித்தியடைந்தவர்களின் எண்ணிக்கை மற்றும் அப்பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் கொரிய அரசின் வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புக்களைப் பெற்றோரின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) 2011 ஆம் ஆண்டு கொரிய மொழித் தேர்ச்சிப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்காக வெளிநாட்டுக் கடவுச் சீட்டு கட்டாயமாக்கப்பட்டதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3367/ '12

கௌரவ. பி. ஹரிசன்,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பற்கு,— (3)

(அ) (i) அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட பாதுகாப்பு அரவணைப்பைப் பெறுகின்ற சிறுவர் இல்லங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றில் உள்ள சிறுவர்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி ஒரு சிறுவரின் பராமரிப்புப் பணிகளுக்கென 2013 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கையில் உள்ள சிறுவர் தடுப்புக் காவல் நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றில் உள்ள சிறுவர்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி ஒரு சிறுவருக்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை யாது;

(iv) அப்பணத்தொகை இவர்களின் பராமரிப்புப் பணிகளுக்குப் போதுமானதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3699/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) 2013 பெப்ரவரி மாதத்தில் ஒரு மெட்றிக் தொன் பெற்றோல் இறக்குமதி செய்யப்பட்ட சராசரி விலை (CIF VALUE);

(ii) மெட்றிக் தொன் ஒன்றில் அண்ணளவாக அடங்கும் பெற்றோல் லீற்றர்களின் எண்ணிக்கை;

(iii) இதற்கமைய, 2013 பெப்ரவரி மாதத்தில் துறைமுகத்திலிருந்து இறக்குகையில் நிலவிய ஒரு லீற்றர் பெற்றோலின் சராசரி விலை;

(iv) ஒரு லீற்றர் பெற்றோலுக்காக அரசாங்கம் அறவிடும் ஒவ்வொரு வரியினதும் அளவுகள்;

(v) ஒரு லீற்றர் பெற்றோலிலிருந்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பெறுகின்ற இலாபம்;

(vi) ஒரு லீற்றர் பெற்றோலை விநியோகிப்பதற்கான செலவு மற்றும் விற்பனையின் மூலம் எரிபொருள் நிரப்பும் நிலையம் பெறும் இலாபம்;

எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4074/ '13

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் பாதுகாப்பற்ற புகையிரதக் குறுக்குப் பாதைகளில் ஏற்பட்டுள்ள விபத்துக்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அவ்வாறான விபத்துக்கள் காரணமாக அங்கவீனமடைந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி விபத்துக்களை குறைப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தற்போது அடையாளங்காணப்பட்டுள்ள பாதுகாப்பற்ற புகையிரதக் குறுக்குப் பாதைகள் காணப்படுகின்ற இடங்கள் யாவையென்பதையும்;

(ii) அந்தந்த இடங்களில் விபத்துக்களை குறைப்பதற்காக மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கும் பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி பாதுகாப்பு வேலைத்திட்டங்களுக்கு செலவாகும் பணத் தொகை மதிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அப் பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கடந்த இரண்டு வருட காலப்பகுதியில் பொருத்தப்பட்டுள்ள புதிய புகையிரத பாதுகாப்புக் கடவைகள் மற்றும் பாதுகாப்பு மின் சமிக்ஞை முறைமைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பொருத்துதல்கள் மேற்கொள்ளப்பட்ட இடங்கள் யாவையென்பதையும்

(iii) அதற்காக ஏற்கப்பட்ட செலவு எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4219/ '13

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஆரம்ப நிலை குடியியல் நீதிமன்றங்களில் தாமத்தை குறைப்பதற்காக 2010, 2011, 2012, 2013 ஆகிய ஒவ்வொரு ஆண்டிலும் நீதி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தனித்தனியே யாவை என்பதையும்;

(ii) ஆரம்ப நிலை குடியியல் நீதிமன்றங்களின் வழக்கு விசாரணைகள் குறிப்பிடத்தக்க வேகத்தில் நடைபெறுகின்றனவா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4340/ '13

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மன்னார் மாவட்டத்தின் பழைய சிலாவத்துறை தபால் அலுவலகத்தில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன என்பதையும்;

(ii) மேற்படி தபால் அலுவலகம் மேம்படுத்தப்படுமெனில் தற்போது அப்பிரதேசத்தில் வசிக்கின்ற மக்களுக்கு பயனுள்ளதாக அமையும் என்பதையும்;

(iii) தற்போது அப்பிரதேசத்தில் வசிக்கின்ற மக்கள் தபால் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக 17 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள முருங்கன் தபால் அலுவலகத்திற்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) சிலாவத்துறை தபால் அலுவலகத்தில் காணப்படுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4341/ '13

கௌரவ சுஜீவ சேனசிங்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கைகளுக்கான சபையினால் இலங்கை வங்கியின் சுதந்திர சதுக்கத்திலுள்ள கிளையில், பேணிவரப்படுகின்ற 2323310 ஆம் இலக்க கணக்குக்கு மேலதிகமாக அதே வங்கியில் 2323246 ஆம் இலக்கத்தின் கீழும் கணக்கொன்று பேணிவரப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) 2005.04.15 ஆம் திகதியன்று மேற்படி நிறுவனத்தின் 4530801719 ஆம் இலக்க சாதாரண வங்கிக் கணக்குக்கு அனுப்பப்பட்ட ரூபா 4,293,253.00 பணத் தொகையை 2005.05.03 ஆம் திகதியன்று 004530207663 ஆம் இலக்க வேறொரு கணக்குக்கு மாற்றுவதற்கு மேற்படி நிறுவனத்தின் நிதி முகாமையாளர் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளர் கட்டளையிட்டுள்ளார் என்பதையும்;

(iii) மேற்படி மேலதிக கணக்கு பற்றிய தகவல்கள் மேற்படி நிறுவனத்தின் வசம் இருக்கவில்லை என்பதால் மேற்படி பணத் தொகை எப்பணிக்காக பயன்படுத்தப்பட்டதென்பது கணக்காய்வின் போது வெளிப்படவில்லை என்பதையும்;

(iv) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள 2323246 ஆம் இலக்க கணக்கு தொடர்பாகவும் எந்தவொரு தகவலும் மேற்படி நிறுவனத்தின் வசம் இல்லையென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) 2323310 ஆம் இலக்க கணக்குக்கு மேலதிகமாக 2323246 ஆம் இலக்கத்தின் கீழ் மேலுமொரு கணக்கை பேணிவருவதற்கான காரணம் யாதென்பதையும்;

(ii) மேலே அ (i) மற்றும் அ (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கு இலக்கங்கள் ஊடாக முறைகேடான நிதிக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்ட ஊழல்பேர்வழிகளான உத்தியோகத்தர்கள் யாவர் என்பதையும்;

(iii) இவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4407/ '13

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது ஆடை உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபடும் கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஆடைத் தொழிற்சாலைகளின் சேவையாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி ஆடைத் தொழிற்சாலைகளில் தற்போது அண்ணளவாக 30,000 ஊழியர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றமையை அறிவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஆடைத் தொழிற்சாலைகளில் நிலவும் வெற்றிடங்கள் இற்றைவரை உள்ளூர் ஊழியர்களைக் கொண்டு நிரப்பப்பட்டதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) எதிர்காலத்தில் மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்காக பங்களாதேஷ், இந்தியா, மியன்மார் போன்ற நாடுகளிலிருந்து வெளிநாட்டு ஊழியர்களை வரவழைக்கும் வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், இவ்வாறான நிலைமையொன்று தோன்றுவதற்கு ஏதுவான காரணிகள் யாவை என்பதையும்;

(iv) இவ்விதமாக ஆடைக் கைத்தொழில்துறையில் வெற்றிடங்களை நிரப்புவதற்காக வெளிநாட்டு ஊழியர்களை ஈடுபடுத்துவதன் ஊடாக இந்நாட்டின் இளைஞர், யுவதிகளுக்குக் காணப்பட்ட தொழில் வாய்ப்புகளை இழக்க வேண்டி ஏற்படும் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(v) ஆமெனில், இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4629/ '13

கௌரவ (திருமதி) தலதா அத்துகோரல,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இரத்தினபுரி புதிய நகர எல்லையினுள் பலாங்கொடை பெருந்தோட்டக் கம்பனியின் கீழ் காணப்படுகின்ற ஓரளவு காணிகள், காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கும் அரசாங்க ஊழியர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படும் பொருட்டு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், குறிப்பிட்ட மொத்த காணியின் பரப்பளவு எவ்வளவு;

(iii) பகிர்ந்தளிப்பதற்குள்ள காணித் துண்டுகளின் எண்ணிக்கை எவ்வளவு;

(iv) இவ்வாறு பகிர்ந்தளிப்பதற்கு உத்தேசமாயுள்ள காணிகளில் ஒரு பர்சஸ் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி எவ்வளவு;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட காணிப் பங்குகள் பகிர்ந்தளிக்கப்படுவதற்கு உத்தேசமாயுள்ள ஒவ்வொரு அரச ஊழியரினதும் பெயர், இவர் இறுதியாக வகித்த பதவி மற்றும் கிடைக்கவுள்ள காணியின் அளவு வெவ்வேறாக எவ்வளவு;

(ii) மேற்படி காணி பெறுனர்களுக்கு மத்தியிலுள்ள குறைந்த வருமானம் பெறும் ஒவ்வொருவரினதும் பெயர், மாதாந்த வருமானம் மற்றும் கிடைக்கவுள்ள காணியின் அளவு வெவ்வேறாக யாது;

(iii) உத்தேச காணி பெறுனர்கள் பணம் செலுத்தியிருப்பின், அவ்வாறு பணம் செலுத்தப்பட்ட கணக்கு மற்றும் அக் கணக்கின் இலக்கம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2507/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) வட மாகாணத்தின் சம்பத்நுவர பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள எத்தாவெட்டுனவெவ வித்தியாலயத்தில் பல பௌதீக மற்றும் மனித வளப் பற்றாக் குறைகள் காணப்படுகின்றன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) எத்தாவெட்டுனவெவ வித்தியாலயத்தில் காணப்படுகின்ற பௌதீக மற்றும் மனித வளங்களுக்கான குறைபாடுகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி குறைப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்காக எடுக்கும் காலம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2684/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழிநுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) "தேசத்திற்கு மகுடம்" கண்காட்சியின் எண்ணக்கருவை அவர் விளக்குவாரா?,

(ஆ) (i) இற்றை வரை ஒவ்வொரு தேசத்திற்கு மகுடம் கண்காட்சியிலும் ஏற்படுத்தப்பட்ட தொழில்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட தொழில்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) இத்தொழில்கள் நிரந்தரமானவையும், ஓய்வூதியத்திற்கு உரித்துடையனவுமா என்பதையும்

அவர் வெவ்வேறாகக் கூறுவாரா?

(இ) (i) அனுராதபுர தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்கு உண்மையிலேயே எச்செலவுத் தலைப்பிலிருந்து பணம் செலவிடப்பட்டது என்பதையும்;

(ii) கடந்த தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்குத் தேவைப்பட்ட ஊழியம் மற்றும் சொத்துக்கள் போன்றவை எந்தவிதக் கொடுப்பனவுமின்றிப் பாவிக்கப்பட்டதா என்பதையும்; உதாரணமாக, ஆயுதப் படை ஆளணியினர் மற்றும் தொழிலாளர்கள் போன்றோரும், இலங்கை போக்குவரத்து சபை பஸ்கள் போன்றவையும் செலவு ஆக்கக் கூறுகளாக மொத்த செலவுக் கணிப்பீட்டின் போது உள்ளடக்கப்பட்டிருந்தனவா என்பதையும்;

(iii) இன்றேல், குறிப்பிட்ட கண்காட்சிக்கான செலவு எவ்வாறு கணிப்பிடப்பட்டது என்பதையும்;

(iv) எதிர்வரும் மூன்று தேசத்திற்கு மகுடம் கண்காட்சிகளுக்கும் ஏற்படுமென எதிர்பார்க்கின்ற செலவினைத் தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3013/ '12

கௌரவ புத்திக பதிரண,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) ஹ/தங்காலை ஆண்கள் தேசிய பாடசாலையில் கல்வி கற்கின்ற மாணவரொருவர் 2007 ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதியன்று தங்காலை பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து அவரது வீட்டுக்கு அழைத்துச் செல்லப்படுகையில் இடைவழியில் தங்காலையின் அப்போதைய தவிசாளரால் பாரதூரமான விதத்தில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) இது தொடர்பாக தங்காலை ஆண்கள் தேசிய பாடசாலையின் மாணவ ஆலோசக ஆசிரியருக்கு அறிவிக்கப்பட்டதன் பின்னர் தங்காலை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) மேற்படி முறைப்பாடு மேற்படி பொலீஸ் நிலையத்தின் முறைப்பாட்டு இலக்கம் C.W.I.B 127ஆம் பக்கத்தின் 24 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதென்பதையும்;

(iv) மேற்படி முறைப்பாட்டின் பிரகாரம் மேற்படி தவிசாளருக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு தங்காலை நகரத்தின் ஓய்வுபெற்ற பிரசைகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளதென்பதையும்

அவர் அறிவாரா ?

(ஆ) ஆமெனில், மேற்படி முறைப்பாடு தொடர்பாக முறைசார்ந்ததொரு விசாரணையை மெற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2014 ஏப்பிறல் 23, புதன்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2562/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கையிலுள்ள பல்வேறான உள்ளூராட்சி நிறுவனங்களிலும் பணியாற்றுகின்ற மக்கள் பிரதிநிதிகளுக்கு மாதாந்தம் கிடைக்கும் சம்பளம் யாதென்பதையும்;

(ii) மேற்படி மக்கள் பிரதிநிதிகளுக்கு போதியளவு சம்பளம் கிடைக்கின்றதா என்பதையும்;

(iii) உள்ளூராட்சி நிறுவனங்களில் பணியாற்றும் மக்கள் பிரதிநிதிகளுக்கு மக்கள் சேவைகளை நிறைவேற்றும் பொருட்டு வழங்கப்படும் வசதிகளும் கொடுப்பனவுகளும் யாவை என்பதையும்;

(iv) போற்றத்தக்க விதத்தில் மக்கள் சேவையினை வழங்குவதற்கு குறித்த வசதிகளும் கொடுப்பனவுகளும் போதுமானதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2787/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (4)

(அ) திரு. சரத் பொன்சேகா எப்போது விடுதலை செய்யப்பட்டார் என்பதை இச்சபையில் அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி மன்னிப்பு நிபந்தனையுடனா அல்லது நிபந்தனையின்றியா வழங்கப்பட்டது என்பதையும்;

(ii) திரு. சரத் பொன்சேகாவின் ஓய்வூதிய உரிமைகள் மற்றும் இராணுவப் பட்டங்கள் மீண்டும் வழங்கப்பட்டனவா என்பதையும்;

(iii) அவரை தற்போதும் 'ஜெனரல்' என அழைக்க முடியுமா என்பதையும்;

(iv) திரு. சரத் பொன்சேகாவுக்கு எதிராக ஏதாவது வழக்குகள் நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறதா என்பதையும்;

(v) சனாதிபதியின் மன்னிப்பு மூலம் அவ்வாறு நடைபெற்றுக் கொண்டிருந்த வழக்குகள் வெற்றாக்கப்பட்டதா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) திரு. சரத் பொன்சேகாவுடன் வேலை செய்தமைக்காக அல்லது அவருக்கு உதவியமைக்காக, தொல்லை கொடுக்கப்பட்ட அல்லது சேவை முடிவுறுத்தப்பட்ட பொலிஸ் மற்றும் இராணுவ ஆளணியினரின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அத்தகைய அதிகாரிகள் மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டனரா அல்லது அவர்களுக்கு நட்ட ஈடு வழங்கப்பட்டதா என்பதையும்;

(iii) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஈ) திரு. சரத் பொன்சேகாவின் விடுதலை தொடர்பில்,

(i) பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட நபர்கள் யாவர் என்பதையும்;

(ii) அழுத்தங்களைப் பிரயோகித்த நாடுகள் மற்றும் அவை எப்போது பிரயோகிக்கப்பட்டன என்பதையும்;

(iii) அரசியல் மற்றும் சமயத் தலைவர்களது இணக்கப்பாடுகள் ஏன் கவனத்திற்கொள்ளப்படவில்லை என்பதையும்

அவர் கூறுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

3083/ '12

கௌரவ புத்திக பதிரண,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2002 முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலான கால கட்டத்தினுள் தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அதிகரிப்புக்கு சமாந்திரமாக விலை அதிகரித்துள்ள புகைத்தல் பொருட்கள் (சிகரெட்டுகள்) வகைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) இவ்வாறு விலை அதிகரிக்காத சிகரெட் வகைகள் இருப்பின் அவை யாவை என்பதையும்;

(iii) 2012 மார்ச் மாதத்தில் டன்ஹில் வகை சிகரெட்டின் விலை அதிகரித்த அளவு யாதென்பதையும்;

(iv) இதன் விளைவாக சிகரெட் ஒன்றை விற்பனை செய்வதன் மூலம் அரசாங்கத்திற்கும் புகையிலைக் கம்பனிக்கும் கிடைத்த வருமானம் தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் விற்பனை செய்யப்பட்ட மொத்த சிகரெட்டுக்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பெறுமானங்களுக்கமைய சிகரெட் விற்பனையின் அதிகரிப்பு அல்லது வீழ்ச்சியின் சதவீதம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3268/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டில் அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகள்தோறும் "சேவை இல்லம்" அலுவலகங்களை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை யாது;

(iii) "சேவை இல்லம்" அலுவலகமொன்றை நிர்மாணிப்பதற்காக மதிப்பிடப்பட்ட பணத்தொகை யாது;

(iv) முதலாவது "சேவை இல்லம்" அலுவலகம் நிர்மாணிக்கப்படுவது எப்போது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3379/ '12

கௌரவ பி. ஹரிசன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) வட மத்திய மாகாண சபையினால் நிருவகிக்கப்படுகின்ற வைத்தியசாலைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஏற்ப தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் அங்கீகரிக்கப்பட்டுள்ள மருத்துவர்கள், தாதிமார்கள், வைத்தியசாலை தொழிலாளர்கள் மற்றும் ஏனைய அங்கீகரிக்கப் பட்ட பணியாட்டொகுதியினர் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வைத்தியசாலைகளில் நிலவுகின்ற அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதியினரின் வெற்றிடங்கள் ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் ஏற்ப எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2012 ஆம் ஆண்டுக்காக வடமத்திய மாகாண சபையினால் மேற்படி மாகாண சுகாதார அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பணத்தொகையைக் கொண்டு வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட சேவைகள் யாவையென்பதையும்;

(iii) 2012 ஆம் ஆண்டில் வடமத்திய மாகாணத்தின் ஒவ்வொரு வைத்தியசாலையிலிருந்தும் சிகிச்சை பெற்றுக்கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) இவ்வருடத்தில் சிகிச்சை பெற்றுக்கொண்ட நோயாளி ஒருவருக்காக வட மத்திய மாகாண சபையினால் செலவிடப்பட்டுள்ள ஒட்டுமொத்த பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3654/ '13

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தில் உள்ள தேசிய பாடசாலைகள், நவோத்யா பாடசாலைகள் மற்றும் முதனிலை பாடசாலைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு;

(ii) மேற்படி பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் ஒவ்வொரு பாடத்துக்கும் அமைய ஆசிரியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு;

(iii) மேற்படி பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றதா;

(iv) ஆமெனில், ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடங்கள் யாவை;

(v) மேற்படி பிரதேசத்தில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுமெனில் அதை தீர்ப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) அம்பாறை மாவட்டத்தில் மேலே இலக்கம் (அ)(i ) இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலைகளில் நூலகங்கள், நீர் வசதி மற்றும் துப்பரவேற்பாட்டு (மலசலகூட) வசதிகள் இல்லாத பாடசாலைகள் யாவை என்பதை அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3943/ '13

கௌரவ அநுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2005 முதல் 2013 வரையான ஆண்டுக் காலப்பகுதிக்குள் நியமிக்கப்பட்டுள்ள சனாதிபதி ஆணைக்குழுக்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி ஆணைக்குழுக்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆணைக்குழுவிற்கும் செலவிடப்பட்டுள்ள பணத் தொகைகள் தனித்தனியே எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு ஆணைக்குழுவும்,

(i) உள்ளடக்கியுள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கை, இவர்களின் பெயர்கள் மற்றும் தகைமைகள் யாவை என்பதையும்;

(ii) நியமிக்கப்பட்டமைக்கான நோக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) தமது அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளனவா என்பதையும்;

(iv) சமர்ப்பித்துள்ள அறிக்கைகளை சபா பீடத்தில் வைப்பாரா என்பதையும்;

(v) சமர்ப்பித்துள்ள அறிக்கைகளின் மூலம் முன்வைக்கப்பட்டுள்ள சிபாரிசுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

4109/ '13

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் e-NIC கருத்திட்டத்திற்காக லங்கா லொஜிஸ்ரிக் நிறுவனத்திற்கு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் செலுத்தப்பட்டுள்ள பணத் தொகைகள் எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட திகதிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்காக 2012.12.31 ஆம் திகதி லங்கா லொஜிஸ்ரிக் நிறுவனம் ரூபா 37,649,044.00 பணத் தொகையை கோரியுள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி பணத்தொகை குறித்த நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) லங்கா லொஜிஸ்ரிக் நிறுவனம் e-NIC கருத்திட்டம் தொடர்பாக வழங்கியுள்ள சேவைகள் மற்றும் மேற்படி ஒவ்வொரு சேவை தொடர்பிலுமான செலவினம் தனித்தனியே யாவை என்பதையும்;

(ii) e-NIC கருத்திட்டத்தின் சகல நடவடிக்கைகளுக்கும் தகுந்த வழங்குனர் ஒருவரை தெரிவு செய்துகொள்வதற்கு உத்தேசமாயுள்ள நிலையில் இடையீட்டு நிறுவனமொன்றுக்கு பெருந்தொகைப் பணம் செலுத்தப்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4408/ '13

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அரச மற்றும் தொண்டர் அமைப்புக்கள் ஊடாக நிர்வகிக்கப்படும் சிறுவர் இல்லங்களில் வதியும் பிள்ளைகளை மேற்படி சிறுவர் இல்லங்களிலிருந்து வெளியேற்றி சமூகமயமாக்கலுக்குட்படுத்தும் வயதெல்லை யாதென்பதையும்;

(ii) மேற்படி வயதெல்லையை அடையும் வரை சிறுவர் இல்லத்தில் உள்ள சிறுவர்களுக்கு கல்வியை பெற்றுக்கொடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) சிறுவர் இல்லங்களிலிருந்து வெளியேற்றப்படும் பிள்ளைகளின் எதிர்காலத்தை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) இவர்கள் பெற்றுள்ள கல்வித் தகைமைகளின் அடிப்படையில் ஏதேனும் தொழில் வாய்ப்பை பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4411/ '13

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நிலைபெறுதகு சக்தி அதிகாரசபையின் மூலம் சுவீகரிக்கப்பட்ட இலங்கை எனர்ஜி தனியார் நிறுவனத்திற்கு சொந்தமான சிறிய நீர் மின்சக்தி உற்பத்திக் கருத்திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டங்களில் தற்போது நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) அக்கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்தினதும் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்கு எடுக்கும் காலம் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(v) இற்றைவரை வேலைகள் ஆரம்பிக்கப்படாதுள்ள கருத்திட்டங்களை அமுலாக்குவதற்காக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2565/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) சுற்றுலா நகரமான அளுத்கம நகரில் விரிவாக்கப்பட்ட வீதி முறைமைக்கு ஏற்றவாறு முறைசார்ந்த விதத்தில் அமைக்கப்படாதுள்ள வடிகால் தொகுதியில் கழிவுகள் தேங்கி இடையூறாக இருப்பதே நகரில் துர்நாற்றம் வீசுவதற்கு காரணமாக அமைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி நிலைமையை சீராக்குவதற்கு எப்போது நடவடிக்கை எடுக்கப்படுமென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) அளுத்கம நகரில் நிர்மாணிக்கப்பட்ட புதிய பேரூந்து தரிப்பிடத்தின் கடைகள் இதுவரை வர்த்தகர்களுக்கு வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3156/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவின் வகிபாத்திரம் என்னவென்பதையும்;

(ii) கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தின் வகிபாத்திரம் என்னவென்பதையும்;

அவர் கூறுவாரா?

(ஆ) (i) பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர்களான திருமதி இந்திராணி சுகததாச மற்றும் திரு. திலக் கருணாரத்ன ஆகியோரினால் வெளிப்படுத்தப்பட்டவாறு 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் பங்குச் சந்தையினைச் சூழ்ச்சித் திறனுடன் கையாளுதல் தொடர்பில் கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தில் நடைபெற்ற அறிக்கை செய்யப்பட்டுள்ள குறிப்பிட்ட சில மாபியா நடவடிக்கைகள் விசாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட விசாரணையின் தற்போதைய நிலையினையும்;

(iii) இது தொடர்பாக மேலதிக நடவடிக்கைகள் ஏன் எடுக்கப்படவில்லை என்பதையும்;

(iv) நடவடிக்கை எடுக்கப்பட்டு ஒத்திணங்கிய சம்பவங்களையும்;

(v) தீர்வுக்கு வருவதற்கு ஏற்பட்ட செலவினையும்;

(vi) இவ்வாறான தீர்வுகளுக்கு வருவதற்கு அரசியல் அழுத்தங்கள் இருந்ததா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3293/ '12

கௌரவ புத்திக பதிரண,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு நேரிடுகின்ற இடையூறுகள் குறித்து ஆராய்வதற்காக 2008 ஜூன் மாதத்தில் பண்டாரநாயக்க மாநாட்டு மண்டப அறை இலக்கம் 2/08 இல் இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சரின் தலைமையில் அமைச்சர்களின் உபகுழுவொன்று நியமிக்கப்பட்டது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது மேற்படி உபகுழு இரத்துச் செய்யப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், இதற்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி உபகுழுவின் நடவடிக்கைகளை நடத்திச் சென்ற கட்டிடத்திற்கான வாடகை, தொலைபேசிக் கட்டணப் பட்டியல், மின்சாரக் கட்டணப் பட்டியல் என்பவற்றுக்காக செலவழிக்கப்பட்ட பணத்தொகை வருடாந்த ரீதியில் வெவ்வேறாக யாது;

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்ட செலவுகளுக்கு மேலதிகமாக ஏற்கப்பட்ட ஏனைய செலவுகளுக்காக செலவிடப்பட்ட மொத்தப் பணத்தொகை வருடாந்த ரீதியில் வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிவாரா?

(ஈ) (i) மேற்படி செலவுகளை மேற்கொண்ட அமைச்சுக்கள் மற்றும் அவற்றுக்கு உரிய செலவுத் தலைப்புக்கள் யாவை;

(ii) மேலே குறிப்பிடப்பட்ட கொடுப்பனவுகள் இதுவரையில் மேற்கொள்ளப் படவில்லையெனின், இக்கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

3383/ ' 12

கௌரவ பி. ஹரிசன்,— வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சரைக் கேட்பதற்கு,—(3)

(அ) இலங்கையில் உருவாக்க எதிர்பார்க்கப்படுகின்ற இயற்கைக் காட்டு யானை பாதுகாப்பு நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு நிலையத்தினதும்,

(i) பெயர், அமைவிடம், பரப்பளவு மற்றும் நிர்மாணிப்பதற்காக மதிப்பிடப்பட்ட பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(ii) எதிர்பார்க்கப்படும் பணிகள் யாவை;

(iii) நிர்மாணிக்கப்படும் மின்சார வேலிகளின் நீளம் மற்றும் அவற்றை நிர்மாணிப்பதற்காக ஒதுக்க எதிர்பார்க்கப்படும் பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(vi) மின்சார வேலிகளை பராமரிப்பதற்காக ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மற்றும் அதற்கு செலவாகும் பணத் தொகை எவ்வளவு;

(v) ஒரு நிலையத்தில் சேவையில் ஈடுபடுத்தப்படும் உத்தியோகத்தர்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) ஹொரவ்பத்தான காட்டு யானைகள் பாதுகாப்பு நிலையத்தில்,

(i) நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள வாவிகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றுக்காக மதிப்பிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு;

(ii) நிர்மாணிக்கப்படும் புற்தரைகளின் எண்ணிக்கை மற்றும் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு;

(iii) யானைகளை புனர்வாழ்வளிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் காலம் எவ்வளவு;

(iv) புனர்வாழ்வளிக்கப்படும் அந்த யானைகள் விடுவிக்கப்படும் பிரதேசங்கள் யாவை;

(v) புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்படும் யானைகள் தொடர்பாக பின்னாய்வு மேற்கொள்ளப்படுமாயின், அது எவ்விதத்தில் மேற்கொள்ளப்படும்

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3908/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கம்பஹா மாவட்டத்தின் ஜா-எல நகரை அடுத்துள்ள தண்டுகம பிரதேசத்தில் கொண்டு நடத்தப்படும் விலங்குச் சாலைகளினதும் விலங்குகளை அறுக்கும் இடங்களினதும் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பிரதேசத்தில் நித்தமும் குவிக்கப்படும் உயிர் கழிவுகளை அப்புறப்படுத்துவது தொடர்பில் நடைமுறையில் உள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(iii) மேற்படி கழிவுகள் தொடர்பில் ஏதேனும் சுற்றாடல் மற்றும் சுகாதார பேணல் வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிபாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2014 ஏப்பிறல் 24, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2569/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2009 ஆம் ஆண்டு அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பாதுகாக்கப்பட்ட பிரதேசமென பிரகடனப்படுத்தப்பட்ட புலத்சிங்கல வகுரான வனம் அழிவுற்று வருகின்றது என்பதையும்;

(ii) மிகவும் அரிதான தாவர, விலங்கு வளங்கள் மிக்க இந்த வனத்தை பாதுகாப்பதற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்படவில்லை என்பதையும்;

(iii) இவ்வனத்தைக் கண்டுகளிப்பதற்காக வருகை தருவோருக்கு தகவல்கள் வழங்குவதற்கானதொரு செயற்திட்டம் இல்லை என்பதையும்;

(iv) படபொத்த கால்வாயினூடாக வகுரான வனத்திற்கு கழிவுகள் வந்தடைவதை நிறுத்துவதற்கானதொரு செயற்திட்டம் ஏற்படுத்தப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்குறிப்பிட்ட கூருணர்வுடனான சுற்றாடல் வலயத்திற்கு பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர்களின் சேவையைத் துரிதமாக வழங்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3113/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2010 சனவரி மாதத்திலிருந்து கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சில காணிகள் அரசியல்வாதிகளாலும் அரசியல் ரீதியாகத் தொடர்புடைய அலுவலர்களாலும் பலவந்தமாக எடுக்கப்பட்டிருப்பது பற்றி அவர் அறிவாரா?

(ஆ) (i) 2010ஆம் ஆண்டிலிருந்து கிளிநொச்சி மாவட்டத்தில் உடைமை மாற்றப்பட்டிருக்கின்ற, குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்ற மற்றும் அனுமதிப் பத்திரம் அல்லது 'சுவர்ணபூமி' உறுதிகளின் பிரகாரம் பராதீனப்படுத்தப்பட்டிருக்கின்ற அரசாங்கக் காணிகளின் பெயர்கள், ஏக்கர் அளவுகள், பெறுமதிகள் ஆகியவற்றை காணி வாரியாகவும்;

(ii) மேற்சொன்ன காணிகளை மாற்றிக்கொடுத்தல் அல்லது ஒப்படைத்தல் மற்றும் அதில் கேள்விப்பத்திர நடைமுறைகளைப் பின்பற்றாமை ஆகியவற்றுக்கான காரணங்களையும்;

(iii) மேலே (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளிலும் தசாப்த காலங்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கும் மற்றும் ஏனையோருக்கும் மேற்படி காணிகளைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புகள் அல்லது வசதிகள் வழங்கப்பட்டிருக்கின்றனவா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) பயங்கரவாதிகளின் உடைமையாக இருந்த பகுதிகளைச் சுத்திகரித்தல் எனும் பெயரின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கடற்கரைக் காணிகளைச் சட்டரீதியான உரிமையாளர்களிடமிருந்து பலவந்தமாக அல்லது வலுக்கட்டாயத்துடன் சுவீகரித்தல் தொடர்பான சார்த்துரை உண்மையானதா என்பதையும்;

(ii) இன்றேல், அத்தகைய சார்த்துரை எவ்வாறு எழுகின்றது என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3255/ '12

கௌரவ புத்திக பதிரண,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) சர்வதேச கடல் மார்க்கத்தை நோக்கியவாறு நிர்மாணிக்கப்பட்டுள்ள காலி ரூமஸ்ஸல யப்பான் சமாதான தாதுகோபுரத்துக்கு அருகாமையில் சுவர்ணபூமி உறுதிகளின் கீழ் வழங்கப்பட்டுள்ள காணிகளை வர்த்தகர்கள் கொள்வனவு செய்து அவற்றில் வீடுகளை அமைக்கும் போர்வையில் ஹோட்டல் கட்டிடத்தொகுதிகளுக்கான மாடிக் கட்டிடங்களை அமைக்கின்றார்கள் என்பதையும்;

(ii) உறவினர் அல்லாதவர்களுக்கு விற்பனை செய்வதற்கு அல்லது சாட்டுவதற்கு, இயலாத சுவர்ணபூமி உறுதிகளைக் கொண்ட மேற்படி காணிகளை வர்த்தகர்களுக்கு விற்பனை செய்வதில் அரச அலுவலர்களும் தொடர்புபட்டுள்ளதாக பிரதேசவாசிகள் குற்றஞ்சாட்டுகின்றனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி காணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளமை சம்பந்தமாக முறைசார்ந்த விசாரணையொன்றை நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) சமாதான தாதுகோபுரத்தின் இருப்பிற்கு பாரிய தாக்கம் விளைவிக்கும் வகையில் மேற்கொள்ளப்படுகின்ற மேலே குறிப்பிடப்பட்டுள்ள காணிகளில் ஹோட்டல்கள் நிர்மாணிக்கப்படுவதை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்தேதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3610/ '13

கௌரவ பி. ஹரிசன்,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கெகிராவ பிரதேச செயலாளர் பிரிவில் மரதன்கடவல தொடக்கம் பஹல அம்பதலே ஊடாக மூரியாகடவல வீதியின் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) இவ்வீதியின் நீளம் மற்றும் திருத்த வேலைக்காக மதிப்பீடு செய்யப்பட்ட பணத் தொகை யாது என்பதையும்;

(iii) இவ்வீதியின் திருத்த வேலைகளை செய்யும் ஒப்பந்தக்கார கம்பனியின் பெயர் மற்றும் அதன் உரிமையாளரின் பெயர் யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவ்வீதியின் வேலைகளை நிறைவு செய்ய வேண்டியிருந்த உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) இக் கால எல்லையில் இவ்வீதியின் வேலைகளை நிறைவு செய்ய முடியாமல் போயிருப்பின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேலே குறிப்பிடப்பட்ட ஒப்பந்தக்கார கம்பனி அநுராதபுர மாவட்டத்தில் வேறு வீதி நிர்மாண வேலைகளைப் பொறுப்பேற்றுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறாயின் இந்த ஒவ்வொரு வீதியின் பெயர் மற்றும் மதிப்பீடு செய்யப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(v) இவ்வீதி நிர்மாண வேலைகளை நிறைவு செய்யும் போது மேற்குறிப்பிட்டவாறு உரிய காலத்தை தாண்டி, காலம் கடத்தப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்குறிப்பிட்ட ஒப்பந்தக்கார கம்பனியினால் வீதி அபிவிருத்தி நிர்மாண வேலைகளை சரிவரச் செய்ய முடியாதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்

(ii) அவ்வாறாயின் இவ்வாறானதொரு ஒப்பந்தக்கார கம்பனி தொடர்பாக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3733/ '13

கௌரவ ரஞ்ஜன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலலோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சவுதி அரேபியாவில் சிரச்சேத தண்டனைக்கு உள்ளாகி உயிரிழந்த முத்தூரைச் சேர்ந்த, பராயமெய்தாத ரிஸானா நபீக் எனும் பாடசாலை மாணவியை ஏமாற்றி போலி விமானக் கடவுச் சீட்டு உள்ளிட்ட ஆவணங்களைத் தயாரித்து வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்த குற்றம் காரணமாக பதிவு இரத்துச்செய்யப்பட்ட "ஓமார் ரெவல்ஸ்" எனப்படும் தொழில் முகவர் நிலையம் மீண்டும் "ஓமல்கா ரெவல்ஸ்" என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளதை அறிவாரா;

(ii) கறைநிரல் பட்டியலில் சேர்க்கப்பட்ட "ஓமார் ரெவல்ஸ்" முகவர் நிலையத்தை அதே பணிப்பாளர் சபையின் கீழ் வேறொரு பெயரில் பதிவு செய்வதற்கு அனுமதி வழங்கியமைக்கான காரணங்கள் யாவை;

(iii) இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் காரணமாக மோசடி முகவர்கள் மென்மேலும் குற்றங்களைப் புரியத் தூண்டப்படுகின்றனர் என்பதையும், போலியான ஆவணங்களைத் தயாரிக்க அச்சப்படுவதில்லை என்பதையும் அவர் ஏற்றுக்கொள்வாரா;

(iv) ஆமெனில், இந்நிலைமையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4092/ '13

கௌரவ அனுர திஸாநாயக்க,— இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபையினால், அதன் கீழ் பயிற்சி பெறும் மாணவர்களுக்காக 2013 ஆம் ஆண்டில் கொழும்பில் நடாத்தப்பட்ட செயலமர்வுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி செயலமர்வுகள் நடாத்தப்பட்ட திகதிகள் மற்றும் ஒவ்வொரு செயலமர்விலும் பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) குறித்த செயலமர்வுகளின் குறிக்கோள்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி செயலமர்வுகளில் பங்குபற்றிய விரிவுரையாளர்கள் யாவர் என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு செயலமர்வுக்காகவும் போக்குவரத்து, உணவு, விரிவுரைக் கட்டணம் உட்பட மேற்கொள்ளப்பட்ட மொத்தச் செலவினம் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4106/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அரசாங்கத்தினால் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டுள்ள "தேசிய பௌதீக திட்டம்" பற்றி விழிப்புணர்வடைந்துள்ளாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி திட்டத்திற்கு அமைவாக,

(i) பயன்படுத்தப்படவுள்ள வன நிலப் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(ii) வனத்திற்கு குறுக்காக நெடுஞ்சாலைகள் நிர்மாணிக்கப்படவுள்ள பிரதேசங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) வனத்தின் மத்தியில் சுற்றுலா வலயங்கள் நிர்மாணிக்கப்படுவுள்ள இடங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4292/ '13

கௌரவ அஜித் பி. பெரேரா,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை கடற் பரப்பில் வாழும் நீலத் திமிங்கிலங்கள் (Blue Whals) பற்றிய விஞ்ஞான ரீதியான ஆய்வொன்று இலங்கை அரசாங்கத்தினால் அல்லது அரசாங்க அனுசரணையுடன் தனியார் துறையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இவ்வாறான ஆய்வொன்று மேற்கொள்ளப்படாவிடின் அதற்குரிய காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கையின் தென் மாகாணத்தின் மிரிஸ்ஸவிற்கு அப்பால் உள்ள கடற் பிரதேசம் நீலத் திமிங்கிலங்கள் (Blue Whals) பெருமளவில் வாழும் பிரதேசமாக இனம் காணப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி நீலத் திமிங்கிலங்களின் இருப்பிற்கு மிரிஸ்ஸ கடற் பிரதேசத்தின் ஊடாகச் செல்கின்ற சர்வதேச கடற் பாதையில் பயணிக்கும் கப்பல்களால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(இ) நீலத் திமிங்கிலங்களின் இருப்பிற்கு மேலே ஆ (ii ) இல் குறிப்பிட்டுள்ளதைப் போன்று ஏற்படும் பாதிப்பை தடுப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4307/ '13

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் 2012ஆம் ஆண்டு முதல் இற்றைவரையில் அறிக்கையிடப்பட்ட டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையையும்;

(ii) 2011ஆம் ஆண்டு முதல் இற்றைவரையில் இதன் விளைவாக மரணமடைந்தவர்களின் எண்ணிக்கையையும்

ஆண்டு ரீதியாக அவர் கூறுவாரா?

(ஆ) 2009 ஜனவரி முதல் இற்றைவரையில் ஆண்டு ரீதியாக,

(i) கண்டுபிடிக்கப்பட்ட டெங்கு நுளம்பு பெருகும் பிரதேசங்களின் எண்ணிக்கையையும்;

(ii) டெங்கு நுளம்பு பெருகும் பிரதேசங்களாக இனங்காணப்பட்டுள்ள பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், அரச நிறுவனங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கையைத் தனித்தனியாகவும்

அவர் கூறுவாரா?

(இ) 2010 ஜனவரி முதல் இற்றைவரையில் ஆண்டு ரீதியாக,

(i) அதிக எண்ணிக்கையான டெங்கு நோயாளர்கள் அறிக்கையிடப்பட்ட இலங்கையின் மூன்று மாவட்டங்களையும்;

(ii) இம்மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் கண்டுபிடிக்கப்பட்ட டெங்கு நுளம்பு பெருகும் பிரதேசங்களின் எண்ணிக்கையையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) (i) நாட்டில் டெங்குத் தொற்று தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ள 2009ஆம் ஆண்டு முதல் இற்றைவரை சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ள குழுக்களையும்;

(ii) அக்குழுக்கள் ஒவ்வொன்றினதும் நியமன திகதிகளையும்;

(iii) அக்குழுக்கள் ஒவ்வொன்றினதும் ஆணைகளையும்

அவர் கூறுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

4317/ '13

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிரிவெனா கல்வி நிறுவனங்களுக்கு ஆசிரியர்களை ஆட்சேர்க்கின்றபோது கவனத்திற்கொள்ளப்படும் அடிப்படைக் கல்வித் தகைமைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்களுக்குத் தேவையான ஆசிரியர்களின் எண்ணிக்கையில் பற்றாக்குறை உள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதன் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கல்வி அமைச்சின் பிரிவெனா கல்விப் பிரிவின் தற்போதைய பணிப்பாளர் யாரென்பதையும்;

(ii) இவருடைய கல்வித் தகைமைகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி பணிப்பாளர் கல்வி நிருவாகச் சேவைக்குரிய ஒரு அலுவலரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4439/ '13

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் தற்போது,

(i) 20 வருட சேவைக் காலத்தையும், 10 வருட சேவைக் காலத்தையும் பூர்த்தி செய்துள்ள பொலிஸ் கான்ஸ்ரபில்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) பொலிஸ் சார்ஜன்ட் ஒருவராக 10 வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள அலுவலர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) மேலே (i) மற்றும் (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள பொலிஸ் அலுவலர்கள் பதவி உயர்வு பெறுவதற்கு தகைமை பெற்றுள்ளார்களா என்பதையும்;

(iv) தகைமை பெற்றுள்ளவர்களில் குறித்த பதவி உயர்வைப் பெற்றுக் கொடுக்க உத்தேசமாயுள்ள எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(v) தகைமை பெற்றுள்ள போதிலும், பதவி உயர்வு கிடைக்காத பொலிஸ் அலுவலர்களுக்கு உரிய பதவி உயர்வுகள் வழங்கப்படுதல் தாமதமடைவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4554/ '13

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பினும் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படாதுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களுக்கு இதுவரை நிரந்தர நியமனங்கள் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) நிரந்தர நியமனங்கள் வழங்கப்படாமையின் காரணமாக மேற்படி ஆசிரியர்களுக்கு உரித்தான சிறப்புரிமைகளை இழந்துள்ளனர் என்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(iv) மேற்படி ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனக் கடிதங்களை வழங்குவதற்கு எதிர்பார்க்கின்ற காலப் பகுதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2571/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) முதலாவது பாராளுமன்றத்திலிருந்து ஏழாவது பாராளுமன்றம் வரை ஒவ்வொரு பாராளுமன்றத்திலுமிருந்த அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) இந்த ஒவ்வொரு அமைச்சரவையிலும் இருந்த பெண் அமைச்சர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) ஒவ்வொரு அமைச்சரவையிலும் இருந்த பெண் அமைச்சர்களின் எண்ணிக்கை, மொத்த அமைச்சர்களின் எண்ணிக்கையில் எத்தனை சதவீதம் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) நாட்டின் தற்போதைய பெண்கள் சனத்தொகையின் சதவீதத்திற்கேற்ப பெண்களுக்கு நியாயமானதொரு பிரதிநிதித்துவம் அமைச்சரவையில் கிடைத்துள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3146/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2010 சனவரி 1 முதல் இற்றைவரை இந்தியாவிடமிருந்து இலங்கை பெற்றுக்கொண்ட உதவிகள், சலுசைக் கடன்கள், நன்கொடைகள் ஆகியவற்றின் அளவை தனித்தனியாக வருடாந்த அடிப்படையிலும்;

(ii) வருடமொன்றுக்கு வழங்கப்பட்ட நிதியங்களுக்கான அனைத்தையும் உள்ளிட்ட ஆகக்குறைந்த வட்டிச் செலவு யாது என்பதையும்;

(iii) ஒவ்வொரு நிதியையும் திரும்பச் செலுத்துவதற்கான காலப்பகுதி எவ்வளவு என்பதையும்;

(iv) குறிப்பிடப்பட்ட நிதியங்கள் பயன்படுத்தப்பட்ட ஒவ்வொரு கருத்திட்டத்திலிருந்தும் ஈட்டுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பணத்தின் அளவு எவ்வளவு என்பதையும்;

(v) கடன் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 5 வருடங்களுக்கான காசுப்பாய்ச்சல் கூற்றினையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3396/ '12

கௌரவ புத்திக பதிரண,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) 65 வயதை தாண்டிய 1980 யூலை வேலை பகிஷ்கரிப்பில் ஈடுபட்டவர்களுக்கு ரூபா 5000.00 கொடுப்பனவொன்று வழங்கப்படுமென 2013 வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கையில் சனாதிபதி அவர்கள் அறிவித்தார் என்பதை அவர் ஏற்றுக்கொள்கிறாரா?

(ஆ) (i) 32 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக 1980 யூலை வேலை பகிஷ்கரிப்பில் ஈடுபட்டவர்களின் குடும்பங்கள் பெரும் பொருளாதார கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்கின்றனர் என்பதையும்;

(ii) மேற்படி பகிஷ்கரிப்பாளர்களில் அதிகமானோர் தற்போது இறந்துவிட்டனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) (i) மேற்படி (அ)இல் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவை வழங்குவதற்கு உத்தேசித்துள்ள வயதெல்லையை 65 இல் இருந்து 55 வரை குறைத்து அக்குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும்;

(ii) இறந்துள்ள யூலை பகிஷ்கரிப்பாளரின் மனைவிக்கு அல்லது பிள்ளை ஒன்றுக்கு மேற்படி கொடுப்பனவை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

## 2014 ஏப்பிறல் 25, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2584/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கிழக்கு மாகாணத்தில் மின்சார வசதியற்ற கிராமங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி கிராமங்களின் பெயர்கள் யாவையென்பதையும்

மாவட்ட மட்டத்தில் வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட மின்சார வசதியற்ற கிராமங்களுக்கு எக்காலப்பகுதியில் மின்சார வசதியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்பதையும்;

(ii) 2012 ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தில் மின்சார வசதியற்ற அனைத்து கிராமங்களுக்கும் மின்சார வசதியினை பெற்றுக்கொடுப்பதற்கான இயலுமை இருந்ததா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3148/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2009, 2010, 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் பெற்றுள்ள கடன்களின் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) நிகர ஒதுக்குகள் வெகுவாக அதிகரித்துள்ளதாக அரசாங்கம் கூறுவதன் பிரகாரம் மேற்படி ஆண்டுகளில் ஒதுக்குகளின் அதிகரிப்பின் அளவு யாதென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இற்றைவரைக்கும் ஒதுக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ள நீண்டகாலக் கடன்களின் தொகை என்னவென்பதையும்;

(ii) கடந்த மூன்று வருடங்களில் இறக்குமதிகளின் விகிதமாக ஒதுக்குகளின் தொகை ஆண்டு அடிப்படையில் எவ்வளவு என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) கூறப்படுவது போன்று ஒதுக்குகளின் நிலை சாதகமானதல்ல என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3217/ '12

கௌரவ புத்திக பதிரண,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வயற்காணி உரிமையாளர்களுக்கும் வாரக்குடி விவசாயிகளுக்கும் இடையில் ஏற்படுகின்ற பிரச்சினைகள் கமநல நியாயசபையினாலேயே தீர்க்கப்படுகின்றது என்பதையும்;

(ii) சுமார் 12 வருட காலமாக மேற்படி நிறுவனம் தாபிக்கப்படவில்லை என்பதையும்;

(iii) ஆதலால், மேற்படி துறையில் ஏற்படுகின்ற பிரச்சினைகள் மாவட்ட அலுவலகங்களில் குவிந்துள்ளன என்பதையும்;

(iv) மேற்படி நிலைமையின் கீழ் வயற்காணி உரிமையாளர்களும் வாரக்குடி விவசாயிகளும் பலவித சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளனரென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) துரிதமாக கமநல நியாயசபையை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3369/ '12

கௌரவ பி. ஹரிசன்,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2 - 5 வயதிற்கு இடைப்பட்ட பிள்ளைகளுக்கு ஒரு கோப்பை பசும்பால் வழங்க அரசு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இதன் பிரகாரம் தற்போது ஒரு கோப்பை பசும்பாலைப் பெறுவதற்குத் தகுதியான பிள்ளைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) இதற்கென 2013 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) இதன்படி ஒரு பிள்ளைக்கு ஒரு கோப்பை பசும்பால் வழங்க செலவிடப்படும் பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கையில் இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ள முன்பாடசாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) 2013 ஆம் ஆண்டில் முன்பாடசாலைகளில் கல்வி கற்ற மாணவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) தற்போது இலங்கைக்கு அவசியமாயுள்ள முன்பாடசாலைகளுக்கான தேசிய கொள்கையொன்று உள்ளதோடு அதனைச் செயற்படுத்தும் திகதி யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

3615/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தின் தெற்கு பயாகலயில் அமைந்துள்ள ஏரியகம பிரதேசம் எந்த கிராம சேவையாளர் பிரிவுக்கு உரித்தானதென்பதையும்;

(ii) அக் கிராமத்தில் வசிக்கின்ற குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி குடும்பங்கள் வசிக்கின்ற காணிகள் மற்றும் வீடுகளுக்கு உறுதிகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கிராமத்திற்கு பொதுப் போக்குவரத்து வசதிகள் மற்றும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு வசதியும் வழங்கப்பட்ட திகதிகள் யாவையென்பதையும்;

(iii) வழங்கப்பட்டுள்ள போக்குவரத்து வசதிகளின் பயண ஆரம்பம் மற்றும் பயண முடிவிடங்கள் யாவையென்பதையும்;

(iv) ஏரியகம பிரதேசம் உரித்தாகின்ற கிராம சேவையாளர் பிரிவினுள் "மக நெகும", மற்றும் "கம நெகும" கருத்திட்டங்கள் நடைமுறையில் உள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4153/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— கல்விச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2012 ஆம் ஆண்டில் பாடசாலை சீருடைகளுக்காக சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட துணிகளின் அளவு எவ்வளவு;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு;

(iii) அத் துணிகளை இறக்குமதி செய்த கம்பனி யாது;

(iv) அக் கம்பனியின் ஊடாக மேற்படி சீருடைத் துணிகள் எந்த அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்டன

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2012 ஆம் ஆண்டுக்கு சீருடை வழங்குவதற்காக கேள்விப் பத்திரங்களை சமர்ப்பித்த கம்பனிகள் மற்றும் விலைகள் யாவை;

(ii) மேற்படி கம்பனிகளில் குறைந்த விலைக் கேள்வியை சமர்ப்பித்த கம்பனியா தெரிவுசெய்யப்பட்டது;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை;

(iv) குறைந்த விலைக் கேள்வியை சமர்ப்பித்த கம்பனியினால் சமர்ப்பிக்கப்பட்ட துணிகளில் காணப்பட்ட குறைபாடுகள் யாவை;

(v) தெரிவுசெய்யப்பட்ட கம்பனி சமர்ப்பித்த சீருடைத் துணிகளிலும் மேற்கூறிய குறைபாடுகளைப் போன்றே மேலும் பல குறைபாடுகளும் இருந்தன என்பதை ஏற்றுக்கொள்வாரா

என்பதை அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4325/ '13

கௌரவ அஜித் பி. பெரேரா,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மில்லனிய பிரதேச செயலாளர் பிரிவில் பாத்தகட, உடுவர, தெல்கொட ஆகிய பகுதிகளில் இயங்கிவரும் கற்குழிகளின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) அந்த கற்குழிகளின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை;

(iii) அந்த ஒவ்வொரு நிறுவனத்தினாலும் முன்னெடுக்கப்படும் தொழில்முயற்சிகளின் இயல்புகள் யாவை;

(iv) மேற்படி ஒவ்வொரு தொழில்முயற்சியையும் மேற்கொள்வதற்குத் தேவையான அங்கீகாரமும் உரிமப் பத்திரமும் பெறப்பட்டுள்ளதா;

(v) ஆமெனில், அந்த ஒவ்வொரு உரிமப் பத்திரமும் அங்கீகாரமும் பெறப்பட்டுள்ள காலகட்டங்கள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசத்தில் காணப்படும் பாரதூரமான சுற்றாடல் மாசடைதல் தொடர்பாக அறியவந்துள்ளதா;

(ii) ஆமெனில், அத்தகைய சுற்றாடல் மாசடையும் நிலைமைகளை தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4428/ '13

கௌரவ கயந்த கருணாதிலக்க,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009-09-24 ஆம் திகதிய 1620/22 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையின் பிரகாரம் அரசாங்க நூலகர் சேவைப் பிரமாணங்களுக்கு அமைவாக இடைக்கால ஏற்பாடுகளின் கீழ் சேவையிலீடுபட்டுள்ள நூலகர்களுக்கு முற்திகதியிட்டு குறித்த வகுப்பிற்கு வழங்கப்பட வேண்டிய பதவியுயர்கள் இதுவரையில் உரிய முறையில் வழங்கப்படவில்லையென்பதையும்;

(ii) தற்போது அரசாங்க நூலகர் சேவையின் ஆட்சேர்ப்பு வகுப்பான III ஆம் வகுப்பில் பல வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்பதையும்;

(iii) மேலே குறிப்பிடப்பட்ட சேவைப் பிரமாணங்களில் இனங்காணப்பட்டுள்ள ஊழியர் எண்ணிக்கையில் 70% கும் அதிகமானவை இற்றைவரை வெற்றிடங்களாக காணப்படுகின்றன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) 1981 ஆம் ஆண்டு தொடக்கம் மேலே குறிப்பிடப்பட்ட நூலகர் சேவையின் உயர்/விஷேட வகுப்பின் சம்பள அளவுத் திட்டமானது நாடளாவிய சேவைகளின் II/II வகுப்பின் சம்பள அளவுத் திட்டத்திலும் உயர்வாக காணப்பட்டதென்பதையும்;

(ii) 06/2006 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் மூலம் நூலகர் சேவையின் விஷேட வகுப்பானது மேலே குறிப்பிடப்பட்ட நாடளாவிய சேவை தாபிக்கப்பட்ட சம்பள அளவுத் திட்டத்திற்கு மிகவும் கீழான MN – 07 சம்பள அளவுத் திட்டத்தில் தாபிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) இதன் மூலம் நூலகர் விஷேட வகுப்பிற்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) மேற்படி பிரச்சினைகளை தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) இந் நடவடிக்கைகள் எத்திகதியிலிருந்து அமுலாக்கப்படுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4440/ '13

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'தயட்ட கிருள' 2014 அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குளியாப்பிட்டி மத்திய மகா வித்தியாலத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட வசதிகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக செலவிடப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி நிதி ஏற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நவீனமயமாக்கல் பணிகள் மற்றும் வசதிகளைப் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகள் 2014 'தயட்ட கிருள' கண்காட்சி ஆரம்பிக்கப்பட முன்னர் பூர்த்தி செய்யப்பட்டதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4555/ '13

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் பதவிக்கு தகுதிவாய்ந்த ஒருவரை நியமிக்காது இரண்டு வருடங்களாக மேற்படி பதவிக்கான வெற்றிடத்தை வைத்திருப்பதற்கான காரணம் யாதென்பதையும்;

(ii) மேற்படி பதவியில் பதிற்கடமையாற்றுவதற்காக தற்போது நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் நிருவாக தரத்தைச் சேர்ந்த ஒருவரா என்பதையும்;

(iii) அவர் உரிய நடைமுறைக்கு இணங்க ஆட்சேர்க்கப்பட்டுள்ளாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2585/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரச புள்ளிவிபரங்களுக்கமைய இலங்கையில் ஒரு குடும்பத்துக்கு மாதமொன்றுக்கு சீவிப்பதற்கு தேவைப்படும் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) ஒரு குடும்பத்துக்கு மாதமொன்றுக்கு உணவுத் தேவைக்கான செலவு மற்றும் உணவு அல்லாத தேவைகளுக்கான செலவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

(iii) ஒரு குடும்பத்துக்கு சீவிப்பதற்கு மாதாந்தம் தேவைப்படும் பணத் தொகை ஒவ்வொரு மாவட்டங்களுக்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு குடும்பத்துக்கு மாதமொன்றுக்கு சீவிப்பதற்கு ரூபா 7500.00 போதுமானதென்பதை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(இ) இன்றேல், ஏன்?

3150/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி முதல் இற்றை வரை உதவிகள், சலுகைக் கடன்கள் மற்றும் மானியங்கள் போன்ற மேற்படி நிதியிடல் வகைகள் மூலமாக அரசாங்கம் சீனாவிடமிருந்து பெற்றுள்ள தொகைகளை வருட வாரியாக வெவ்வெறாகவும்;

(ii) வழங்கப்பட்டுள்ள நிதிகளுக்கான அனைத்தையும் உள்ளடக்கிய ஆகக் கூடிய மற்றும் ஆகக் குறைந்த வட்டிச் செலவினத்தை வருடவாரியாகவும்;

(iii) ஒவ்வொரு நிதியிடலுக்குமான மீளச் செலுத்தல் கால அளவினையும்;

(iv) நிதியிடல் பயன்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு கருத்திட்டத்தினதும் எதிர்பார்க்கப்பட்ட வருமானங்களையும்;

(v) கடன் வழங்கப்பட்டுள்ள திகதியிலிருந்து 5 வருடங்களுக்கான ஒவ்வொரு கடனினதும் காசுப் பாய்ச்சல் கூற்றினையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3418/ '13

கௌரவ புத்திக பதிரண,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள நடுத்தர மற்றும் கீழ் நடுத்தர வகுப்புகளைச் சேர்ந்த பொதுமக்களில் பெரும்பாலானவர்கள் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக முச்சக்கர வண்டிகளையும், மோட்டார் சைக்கிள்களையும் பயன்படுத்துகின்றார்கள் என்பதையும்;

(ii) மேற்படி வண்டிகளுடன் இணைந்த நேரடியான மற்றும் மறைமுகமான தொழில்வாய்ப்புக்கள் பல உருவாகி உள்ளன என்பதையும்;

(iii) முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் அவற்றின் உதிரிப்பாகங்களின் விலை அதிகரித்துள்ளமை மேற்படி தொழில்கள் பாதிக்கப்படுவதற்கு காரணமாக அமையலாமென்பதையும்;

(iv) முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்கு தற்போது அறவிடப்படுகின்ற அதிக வரி அவற்றின் விலை அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்துள்ளதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை இறக்குமதி செய்ததன் பின்னர் 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை இலங்கையினுள் அறவிடப்படுகின்ற வரித் தொகைகள் மற்றும் ஏனைய அறவீடுகளின் அளவுகளை சதவீத அடிப்படையில் வருட ரீதியில் வெவ்வேறாக குறிப்பிடுவாரா என்பதையும்;

(ii) முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்கு வரிச் சலுகைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3429/ '13

கௌரவ பி. ஹரிசன்,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கொழும்பு நகரத்தில் காணப்படும் வாகன நெரிசலைக் குறைப்பதற்காக, 2007-2009 காலப்பகுதியில், கொள்கலன்கள் உள்ளிட்ட கனரக வாகனங்கள் நகரத்தினுள் பயணிக்கும் நேரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) கொள்கலன்கள் உள்ளிட்ட கனரக வாகனங்களுக்கான பயண நேரத்தை மட்டுப்படுத்தும் மேற்படி செயன்முறையை நடைமுறைப்படுத்துவதற்கு முற்பட்ட நிறுவனங்கள் யாவை;

(ii) அன்று நகரத்தினுள் கனரக வாகனங்களின் பயணம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த கால நேரங்கள் யாவை;

(iii) தற்போது மேற்படி செயன்முறை இரத்துச் செய்யப்பட்டிருப்பின், இதற்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) கொழும்பு நகரத்தினுள் வாகன நெரிசல் அதிகரிப்பதற்குக் காரணமான கொள்கலன்கள் உள்ளிட்ட கனரக வாகனங்களின் பயண நேரங்களை மட்டுப்படுத்துவதை மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4556/ '13

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 ஆம் ஆண்டுக்காகத் தேவைப்படுகின்ற ஒருசில மருந்து வகைகளை பெறுவதற்காக ஏற்கனவே கேள்விப்பத்திரதாரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனரா என்பதையும்;

(ii) மேற்படி ஒரு மருந்து வகையை பெற்றுத்தருவதற்கு பல கேள்விப்பத்திரதாரர்கள் முன்வந்துள்ளபோது தகுதிவாய்ந்த கேள்விப்பத்திரதாரரை தெரிவு செய்வதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்;

(iii) இதன் காரணமாக 2014 ஆம் ஆண்டில் ஆஸ்பத்திரிகளில் மருந்துப் பற்றாக்குறை உருவாகின்ற ஆபத்து நிலவுகின்றதா என்பதையும்;

(iv) 2013 ஆம் ஆண்டுக்காக கொள்வனவுக் கட்டளை அனுப்பப்பட்ட மருந்துகளில் கிடைத்துள்ள அளவு எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?